பதிவு எண்—M 5780 | வெள்ளிக் கிழமையில் | குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

773

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—6 | துருதுலம், | மாம்பாக்கம்; விசய, | ஐப்பசி; 6—11—53 | தளி 3

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

கடலைவிடப் பெரியது!

உதவித்திறமாகிய ஒப்புரவுக் கொள்கையே (சமதர்மக் கொள்கையே) வாழ்க்கைக்கு உயிர்! அது, உரிமை பறித்துப் பங்கிடுதலால் அமைவதன்று: அவரவரும் தமது உழைப்பின் தேட்டத்தை அன்பும் அருளுமாகிய அறத்தைப் பெருக்கிக்கொள்ளும் உரிமையால் வகுத்து வழங்கி ஒப்புரவு செய்துகொள்ளுவதால் அமைவது!

உதவிவகைகளில் ஒன்று, காரணமின்றிச் செய்யும் உதவி; மற்றொன்று, காலத்தில் செய்யும் உதவி; இன்னொன்று, பயன் விரும்பாமற் செய்யும் உதவி! இத்தகைய உதவிகள் செய்வோர் இருத்தலாலேதான் உலகம் உய்ந்து வருகின்றது! நிரம்ப இருந்தால் உலகம் மிகச் சிறப்பாய் மிளிரும்.

இம் மூவகை உதவிகளும் முறையே அடியார், அறவோர், துறவோர் என்பவரால் சிறப்பாகச் செய்யப்பெறும். அடியார் என்பவர் எல்லாப் பற்றுக்களும் விட்டு அகத் துறவு முற்றும் உடையோராய் இறைவன் திருவருள் பெற்று அத் திருவருட் கண்ணால் அருள்ஞான வாழ்க்கை நடத்துவோர். அறவோர் என்பவர், உலகியலோடு பொருந்திக் காதற் கிழவனுங் கிழத்தியுமாக உரிமைச் சுற்றமொடு அறத்தின் ஒரு கூறாகிய அன்பின் இல்வாழ்க்கை நடத்தி, அறத்தின் மற்றொரு கூறாகிய அருள் வாழ்க்கையின் அகத் துறவுக்குரிய தவச் சிறப்புக் கேற்ற பக்குவத்தைத் தாமும் பிறரும் பெற முயன்றுகொண்டிருப்பவர்! துறவோர் என்பவர், காதற் கிழவனுங் கிழத்தியுமாக உரிமைச் சுற்றமொடு அறத்தின் மற்றொரு கூறு என்று முன்னே சொன்ன அருள் வாழ்க்கையின் அகத் துறவைப் பெறத் தவம் புரிந்துகொண்டிருப்பவர்.

இத்தகையமேலோர்களாலேதான் மன்பதைப்பணிகள் இயற்றுதல் இயலும். இவருள், துறவோர், பயன்கருதாது உதவுவோர். கடல் நீர் மழை நீராகக் கிடைப்பதற்கும் இவர் காரணமாவர். இறைவன் திருவருள் அவ்வாறு மழைபொழிவிப்பதற்கு இவரது தவச் சிறப்பு, காரணம்! இக் காரணங்களால் இவர் போல்வார் செய்யும் பயன் கருதாத உதவி, கடலின் தன்மையினும், பெரிதாயிற்று!

பயன்தூக்கார் செய்த உதவி
நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.

பயன் தூக்கார் செய்த உதவி—பயன் கருதாமல் ஒருவர் செய்த உதவியின், நயன் தூக்கின்—ஈர இயல்பை எண்ணிப் பார்த்தால், நன்மை—அதன் நலம், கடலின் பெரிது—கடலைவிடப் பெரிதெனத் தோற்றும்.

தூக்கல், சீர் தூக்கல்; அதாவது, இன்ன உதவி செய்தால் அது பின்பு இன்ன நலம் தரும் என்று எண்ணிப்பார்த்தல்; பயன் தூக்கார் செய்த—பயன் தூக்காராய்ச் செய்த;

உதவி நயன்—உதவிக்குக் காரணமான ஈர இயல்பு; அதாவது இரக்கத்தன்மை; நன்மை—அதன் மேம்பாடு.

கடலால் உலகுக்கு உண்டாகும் உதவி, மழை; கடலின் உதவியில்லையேல் நாட்டில் ஈரம் இல்லை; கடல், பயன் கருதாததான் அவ்வுதவியைச் செய்து வருகின்றது. ஆனால் அது தனக்கு ஏதுந் தேவையில்லாதது. தேவைமிக்க மக்கள், பயன் கருதாமல் செய்வதென்றால், அது அக் கடலின் தன்மையினும் உயர்ந்ததேயாதலின், 'கடலின் பெரிது' என்றார்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	விசய, ஐப்பசி,	தளிர்
6	6-11-53 வெள்ளி	3

என்ன நாகரிகமோ!

மக்கள் போக்கு:

இப்போதெல்லாம் அரசியலென்றால் அதன் கடமை மக்களுக்கு உணவு, உடை, உறையுள் முதலிய அடிப்படைத் தேவைகள் கிடைக்குமாறு செய்வது தான் என்று இயல்பாக எண்ணப்படுகிறது. அதனால் மக்கள் எதற்கெடுத்தாலும் பெரும்பாலும் அரசாங்கத்தையே எதிர்நோக்கிக்கொண்டு தத்தம் பொதுத் தேவைகளைத் தாமே கூட்டு முறையில் தேடித் தீர்த்துக்கொள்ளாமல், நமக்கென்ன வந்தது என்று ஒதுங்கி இருந்துவிடுகின்றனர். இந்நிலையில், பல்வேறு பிரிவாக உள்ள மக்களை அவரவர்களுக்குள்ள தேவை நிலைகளை ஒட்டித் தாம் தாம் இன்னின்னவற்றைச் சாதித்துவிடுவதாகக் கூறிப் பல அரசியல் கட்சிகள் பயன்படுத்திக் கொள்ளுகின்றன. சாதி சமய வெறி மாறி வரும் காலத்தில் அரசியல் வெறி மிகுதியாகத் தலைதூக்கி ஆடத் தொடங்கி இருக்கின்றது.

அரசியலின் தலைக்கடன்:

நம் முன்னோர்கள் அரசியலின் தலையாய கடமை 'நன்னடை நல்குதலே' என்று முடித்துக் கூறுகிறார்கள். புறநானூற்றில் ஒரு வீரத்தாய் கூறுவதாக உள்ள,

"ஈன்று புறந்தருதல்
என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல்
தந்தைக்குக் கடனே
நன்னடை நல்கல்
வேந்தற்குக் கடனே
வேல்வடித் துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே"

என்னும் பாடற் பகுதிகளில் அவரவர் கடமையைக் கூறுகிற போது இக் கருத்து தெளிவாகக் கூறப்படுகிறது.

ஒழுக்கத்தின் முதன்மை:

நன்னடையாகிய ஒழுக்கம் காக்கப்படாத வரையில் நாட்டில் எவ்வளவுதான் நல்ல உணவும், உடையும், உறையுளும் அமைந்தாலும் அமைதி நிலவ வழியில்லை, வஞ்சமும், பிறவும் வழிகாட்ட, ஒருசார் மக்கள் மேல் மேல் உயரவும் பிறிதொரு சார் மக்கள் கீழ் கீழ் இழிந்து போகவுமே நேரும்.

புதிய நாகரிகத்தின் பதிவு:

இனி, நன்மைகளுக்கு மேல் தீயவற்றையே பெரிது பதித்துள்ள புதிது புகுந்துள்ள மேலை நாட்டு நாகரிகமும், இழிந்த திரைப்படக் காட்சிகளும், அவைகளை ஒட்டி எழுந்துள்ள பல இதழ்களும், நாட்டு மக்களைக் குறிப்பாக, இளைஞர்களைக் களியாட்டங்களில் ஆழ்த்தி வருகின்றன. அரசாங்கம் இவைகளைத் தக்கபடி திருத்தப் போதிய கருத்துச் செலுத்துவதாகவே தெரியவில்லை.

பலதர மக்கள் நிலை:

மேலே கூறிய நிலையில் கெடுபவர்கள் பெரும்பாலும் நடுத்தர மக்களும், செல்வநிலையிலுள்ளவர்களுமேயாகும். இவர்களை அடுத்துக் கீழ்த்தர நிலையிலுள்ள மக்களிற் பலர் வறுமையினாலேயே வேறு வழியின்றி, நகரப் பகுதிகளுக்குச் சென்று மக்கள் நெருக்கமாக உலவும் கடை, கண்காட்சி, திரைக்காட்சி இடங்களில் தெருவோரங்களில் தங்கி இழி நிலையிற் கிடந்து, நோயையும் நொடியையும் பரப்பி வருகின்றார்கள். இவை நாளுக்கு நாள் பெருகிவருவதைத் தடுப்பதற்கு வழி காணவேண்டுமே, என் செய்வது?

அரசியலும் நல்லோரும்:

அரசியலார் தலையாய கடன் நன்னடை நல்குதலே என்றும் அதனை அடுத்த கடமைகளே மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல் போல்வன என்றும் தீர்மானித்து ஆவன செய்தல் ஒன்று; சென்னை போன்ற நகரங்களில் வீடு வாசலின்றித் தெருவோரங்களிலும் ஒதுக்கிடங்களிலும் ஒண்டித் தூய்மையின்றி அழுக்கே வடிவாய், நோயும் கொடியும் கொண்டு பிச்சை எடுத்தும், நெறி நீங்கியும் கெடுகின்ற மக்களை அப்புறப்படுத்திப் பிழைப்புக்கு வழி வாயில் காண நாட்டுத் தலைவரும் முயல வேண்டுவது மற்றொன்று.

அனாதைப் பிணங்கள்:

வறுமையினால் வேறு வழியின்றித் தம்மைத் தாமே கெடுத்துக்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

மனிதனும் பகுத்தறிவும்

(வே. ந. நா.)

இவ்வுலகில் வதிகின்ற உயிரினங்களுள் மனிதனே உயர்ந்தோனாகவும், மற்ற உயிர்வகைகளை அடக்கியாளக் கூடிய திறம் பெற்றவனாகவும் இருப்பதைக் காண்கின்றோம். அவ்வாறவன் மேலான நிலையெய்த உறுதுணையாய் உள்ளது பகுத்தறிவென்க.

ஆனது பற்றியே "மனிதனும் பகுத்தறிவும்" பிணைந்த தொடர்புடையதென்று மனநூல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அவ்வாறான பகுத்தறிவை இயற்கை, மனிதனுக்கு எவ்வாறளித்துள்ளது? பகுத்தறிவென்பதெது? மனமும் அறிவும் எவ்வளவிற்கு வேறுபட்டுள்ளன? சூழ் நிலை மனிதனை எவ்வாறு பாதிக்கின்றது? அறிவு தருவதில் நூற்கல்வி எவ்வளவிற்குப் பயன்படுகின்றது? நாடு முன்னேற அறிவின் முக்கியம் எவ்வளவு என்பன போன்ற வினாக்களுக்கு உத்தரங் காண மனநூல் முறையில் சிறிதாராய்வோம்.

புலனறிவு:

உயர்ந்த உயிரினமாகிய மனிதன் தன் ஐம் பொறிகளில் ஒரு பொறி ஊனமாயின் அதனாற் பெறும் மனமும் இருக்க முடியாதல்லவா?

எனவே மனிதன் தனது ஐம்பொறிகளினாலேயே அறிவைப் பெறுகின்றானெனினும் பொறிகளின் இயக்கங்கள் சில நேரங்களில் தெளிவாகத் தோன்றாத நிலையில் அவ்வியக்த நிலை (inihibition) யில் உள்ளன.

பிறர் நம்மை அழைப்பதனையும், நம்மெதிரே நிற்பதனையும், நம் தேகத்தை உலுக்குவதனையும் சிற்சில நேரங்களில் நம்மால் அறிந்து கொள்ள முடிவதில்லை. கேட்டால், ஞாபகம் எங்கேயோ சென்றுவிட்டது மன்னிக்கவும் என்று பதிலிறுக்கின்றோம்.

மேலும் உறங்கும் பொழுதுங்கூட, பொறிகள் தன்னியக்கமின்றியுள்ளதைக் காண்கின்றோம். காரணம், புலனறிவிற்கு உடந்தையான நரம்பு மண்டலத்துடன் கூடிய மூளை எண்ணுந் திறனைப்பெற்ற மனத்தின் வயப்பட்டுவிட்டதேயாகும். ஆகவே மனிதனுக்கு அறிவு தருவதில் ஐம்பொறிகளான புகுவாய்களும் (Receptors) மனத்தின் வயப்படும் நரம்பு மண்டலத்துடன் கூடிய மூளையும், இதற்கெல்லாம் முதன்மையான ஞானவடிவமாகிய ஆன்மாவும் ஒன்றுசேர்ந்தே உதவுகின்றன.

அவ்வறிவின் தன்மையாவது, அகப்புறத்தூண்டலுக்கு ஏதாவதொரு துலங்கலை அல்லது எதிரூன்றலை (Re-action) நோக்கமற்ற முறையில் செய்வதாகும்.

மேற் கூறிய புலனறிவைந்தும் ஏனைய செடி கொடி புழு பூச்சி முதலிய உயிரினங்கள் அனைத்திற்கும் அமைந்து காணப்படுவதில்லை யானை முதலிய விலங்குகட்கும் கிளி முதலிய புட்கட்குமே காணப்படுகின்றன. மற்றவற்றிற்கு ஒரு சில அறிவே காணப்படுகின்றன.

இதனை, ஆசிரியர் தொல்காப்பியனார் (தொல், மரபு, 28-லிருந்து காணலாம்) முறையாக விளக்கியுள்ளார்.

மரம் செடி முதலியன தொட்டறியும்படியான ஓர் அறிவையே பெற்றிருக்கின்றன வென்றும், அதனோடு சுவைத்தறியும்படியான நந்து, கிளிஞ்சிற் புழு முதலியன ஈரறிவைப் பெற்றுள்ளன வென்றும், இவற்றினோடு மோந்துந் தன்மையையும் அறியவல்ல மூவறிவைக் கறையான் எறும்பு போல்வன பெற்றிருக்கின்றன வென்றும், இம் மூவறிவினோடு கண்ணால்காணுந் தன்மையையும் பெற்றுள்ள நண்டும், வண்டும் போல்வன நான்கறிவைப் பெற்றிருக்கின்றன வென்றும், இந் நான்கினோடு செவியால் ஓசையுணருந் தன்மை வாய்ந்த யானை முதலிய விலங்குகளும் கிளி முதலிய பறவைகளும் ஐயறிவைப் பெற்றுள்ளன வென்றும் அவர் கூறியுள்ளார்.

மனிதனும் பகுத்தறிவும்:

மேற் கூறியவாறு மனிதர்களும் அவ் ஐயறிவையே பெற்றிருக்க, அவர்களை மட்டும் யானை கிளி போன்ற ஐயறிவு உள்ள பிராணிகளினின்றும் பிரித்துக் கூறக் காரணம் என்ன?

ஓரறிவு முதல் ஐயறிவு ஈறாகப் பெற்றுள்ள செடி கொடி புழு பூச்சி பறவை விலங்கு முதலிய சிற்றுயிர்களும் சூழ்நிலை அருட்டிகட்கு (தூண்டலுக்கு) ஏதாவதொரு நோக்க மற்ற, செயல் தெளிவற்ற (Selectivity) வெளியீட்டைச் (Response) செய்கின்றன. ஆனால், மனிதனே புலனறிவினால் எண்ணுந்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD, COIMBATORE.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அவைகளில் முதலாவதுகல்வி. எந்த ஒருநாடு தற்கால உலக நீதியில் கல்வி யறிவுடையவர்களைப் பெருவாரியாகப் பெற்று முன்னணியில் நிற்கிறதோ, அதுதான் உலகில் சிறந்த நாடெனக் கருதப் படுகிறது. எனவே, ஏனைய நாடுகளும் தத்தம்நாட்டுமக்கள் அனைவருமே கல்வியறிவுடையவர்களாய்த் திகழவேண்டும் என்று அதற்கான முயற்சியில் ஈடுபடுவது பாராட்டற் குரியதாம். ஆனால் அக்கல்வி எத்தகையதாய் எவ்வளவில், எம் முறையில் நாட்டு மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதுதான் சிக்கல்.

பாடசாலையில் அளிக்கப்படுவது நூற் கல்வி. ஏட்டுக்கல்வியே ஒரு நாட்டை உயர் நிலைக்குக் கொண்டு வந்து விட முடியாதல்லவா? ஆயினும் அதுவும் ஓர் அளவுக்கு இருக்கவேண்டும். இருந்தால்தான் பிற கல்வி பயில ஏதுவாக இருக்கும். அதற்காக விவசாயத்தைப் பற்றி நூல்வாயிலாகவே படித்தவர் விவசாயக் கலையைப் பூரணமாக அறிந்தவராகார். ஓரளவுக்குத் தொழிற் பழக்கமும் வேண்டும். மாணவர்களின் பிற்கால நல்வாழ்வுக்கு வேண்டிய எல்லாவகைக் கல்விகளுள்ளும் முக்கியமானதொன்று நல்லொழுக்கப் பயிற்சி. எவ்வளவு நூலறிவு பெற்றும், தொழிற்கல்விபெற்றும், செல்வம் குவித்தும் பண்பாடு இல்லையென்றால்தன்பாடு திண்டாட்டந்தான். மாணவர்கள் இளமை முதலே சீரிய சிறந்த கல்வியைப் பெற வேண்டும் என்று அறிஞர்கள் கூறுவது எதற்கு? உலக அநுபவத்தில் பார்க்கும் ஒவ்வொரு சின்ன நிகழ்ச்சியும் தான்பெற்ற கல்வியினால் வந்து உதிரும் மணி

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

. . . . . இனி அரிதேபோலும்!

அருமைமிகு கலைக்குரிசில்! ஆன்றமுது பெரும்புலவ!
அறிஞர் ஏறே!
பெருமைமிகத் தமிழகந்தான் பெறும்பெரும்பேராசிரிய!
பெரிதும் நன்றே
இருமொழிகள் தேர்ந்தசைவ சித்தாந்த வித்தகராம்
இனிய சான்றோய்!
மருவருஞ்சீர்ப் பண்டிதமா மணி! நீயும் மறைந்தெமை என்
வருந்த வைத்தாய்? (1)

அன்புமிகு பெருந்தகையோய்! அரியபெரும் புலமையினோய்!
ஆன்ற சான்றோய்!
மன்பெருஞ்சீர் மணிமொழியார் வாசகத்தின் பொருள்விரிக்க
வல்ல நல்லோய்!
நன்றுநின தரும்பிரிவால் தமிழ்நாடே மிகஇருண்டு
நலமிழந்த
தென்புகல்கேம்? என்புரிகேம்? ஏதொன்றும் அறியகிலேம்!
இனைகின்றேமால். (2)

பூங்குன்றம் எனும்நாட்டிற் புகழோங்கக் கணியன்எனும்
புலவோன் முன்னாள்
"ஈங்கெதுவும் நம்மூரே எவருநம கேளிர்" எனும்
இனிய கொள்கை
தாங்கிமிக வாழ்ந்திருந்தான்! தமிழ்க்கணியாம் கதிரேசச்
சான்றோய்! இந்நாள்
ஓங்குபெரும் புலமையினால், உவந்தவனை நினைந்துவந்தேம்!
ஒளித்தாய் என்னே? (3)

மாட்சிமிகு பெரும்புலவ! மகிபாலன் பட்டியின்மா
தவமாம் மாண்ப!
சேட்சிமையும் புகழ்பொறித்த திறலுடையோய்! கதிரேசச்
செல்வ! உண்மைக்
காட்சியினால் மணிமொழிக்குக் கதிர்மணி நல் விளக்கவுரை
முற்றுங் கண்டு
நீட்சிமிகும் எம்ஆவல் நிறைவுசெய்வாய் என இருந்தேம்!
நீத்தல் நன்றோ? (4)

செழிக்குமுயர் செந்தமிழ்தேர் சிவநெறிசன் மக்களெலாம்
சிறக்கப் போற்றி
விழிக்குநிகர் எனப்பரவும் வியன்திருவா சகமறைக்கு
விளக்கம் நல்கி,
மொழிக்குமொழி சுவைபெருக, முயன்றரிது மதிநுட்பம்
முழுதும் காட்டி,
வழிக்குவழி நிலவுமுறை வழங்கியும், என் அதனை முற்றும்
வரைந்திலையால்? (5)

செய்யதமிழ் உள்ளளவும் சீர்திருவா சகமறைதான்
சிறந்தி லங்கும்!
மெய்யேயஃ துள்ளளவும் வியன்கதிரே சர்பெயரும்
விளங்கு கிற்கும்!
பொய்யில்லை உண்மைஎனப் புகலுகிற்கும் பெருநிலையில்
புகழ்மை பூத்தோய்!
ஐயா! நினைச் சிறந்த உரை யாசிரியர் வரிசையினில்
அறிஞர் கொள்வர்! (6)

அரியதிரு வாசகத்தின் அழகியநற் கவிதைகளை
ஆர்வம் ஓங்கப்
பெரிதுவந்து வரைந்துகொண்ட பெருமான்தான், "மூலமட்டும்
பெற்றென்? நல்ல
விரிவுரையும் வேண்டும்" என விரும்பிநின்று, நின்னுரையின்
மேன்மை தேர்ந்து,
"சரி! இவன்பால் *நூல்கொளலே தகுதி" என்றே நினைத்தன்பால்
சாரக் கொண்டான்! (7)

சேக்கிழார் கம்பரொடு திருத்தக்க தேவர்முதல்
சிறந்து யர்ந்த
தேக்குபெரும் புலமைநலச் செல்வர்கடம் கவிதைஇன்பைத்
திறம்தெ ரிந்து,
நோக்கிமிக ஆய்ந்தாய்ந்து, நுணுகிமிக நயம்பொலிய,
நவலு கிற்பாய்!
பாக்கியமஃ திழந்தெளியோம் பண்டிதமா மணி! இன்று
பதைக்கின் றேமால்! (8)

ஞானத்தின் திருவுருவம், நனிஅன்பின் திருவுருவம்
முதலாம் நல்ல
தேனத்தின் சுவைமிகிற்றும் சிறந்த பல கட்டுரைகள்
தெளிய ஆய்ந்து,
வானத்தின் மிசையில்லா வகையின்பம் வளர்த்தெமக்கு
வரைந்த ளித்தோய்!
ஏனித்த கையோய்நீ! இலக்கியநல் இன்பொரீஇ
இறைதாள் சேர்ந்தாய்? (9)

மண்ணியல் நற் சிறுதேரும், வளம்நிறைசா ணக்கியமும்,
மாண்பார் வெள்ளி
எண்ணுமுயர் நீதிகளும், இனிது வட மொழிநின்றும்
எழிலின் மிக்க
தண்ணியசெந் தமிழ்நடையில் தகுதியுற மொழிபெயர்த்துத்
தந்த எங்கள்
புண்ணியனே! நின்போலும் புலமையினோர் தோன்றலினி
அரிதே போலும்! (10)

—புலவர். முருகவேள் **B. O. L.**

* நூல் கொளல்—பாடங் கேட்டல்.

(-2ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு பல்வகை நோய்களுக்கு ஆளாகி அழிந்துபடும் இத்தகைய இரங்கத் தக்க எளிய மக்களைச் சேர்ந்தவர்களில் அனைத்தைப் பிணங்களாக அருவருக்கத் தக்க முறையில், கேட்பாற்றுத் தெருவோரங்களிலும், ஏன்? மருத்துவ மனைகளுக்கு அருகிலேயே கூடக்கிடப்பவர்களாய் மாண்டு போவாரையும் அவ்வப்போதும் பார்க்கிறோம்.

பார்க்கவே வழங்காத அவர்களைத் தெருவே போவார் வருவாரும் கவனிப்பதில்லை; கவனிக்க முடிவதில்லை; 'தரும சாவு' எனப் பணம் தண்டி இதனால் பிழைக்கவும் சிலர் முற்பட்டு விடுகிறார்கள் — இவைகளை எல்லாம் பற்றிக் கவனிக்க வேண்டுவதில் அரசினரைவிட நாட்டுத் தலைவர்கட்கே பொறுப்பு மிகுதியாய் இருக்கவேண்டும். இவ்வளவு நிலைகுலைவுக்கும் காரணமான இக்கால நாகரிகந்தான் என்ன நாகரிகமோ!!

—ந. ரா. ஆட்டலரசு.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். பண்பட்ட நிலத்துப் பயிர்க்கும், பண்படாத நிலப்பயிர்க்கும் வேற்றுமை உண்டு.

ஆகவே, ஒருநாட்டின் முன்னேற்றத்திற்கான பல கூறுகளில் முக்கியமாகக் கவனிக்கப் படவேண்டியது ஏட்டுக் கல்வி தொழிற்கல்வியோடு நல்லொழுக்கக் கல்வியுமாம். இதைக் கருத்திருத்திப் பள்ளிகள் பெரும்பாலும் குருகுலப் பள்ளிகளாகமாறினால்,எல்லா நாடுகளும் மிகுவிரைவில் நலமுடன் வாழும் நிலை பெறக் கூடும்.

—நாராயணசாமி.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திறனைப் பெற்று, இத் தூண்டலுக்குத் துலங்கல் செய்ய வேண்டுமா, வேண்டாமா? ஏற்ற துலங்கலெது? எவ்வாறு செய்தல் வேண்டும்? என்பதான செயல் தெளிவுள்ள பகுத்தறிவை ஆறும் அறிவாகக் கொள்வான், ஆனது பற்றியே மனிதனை உயரின உயிர் என்று மற்ற உயிரினங்களினின்றும் வேறுபடுத்திப் புகழ்கின்றனர். இப் பகுத்தறிவை ஓரளவாவது பெறாத மனிதர்களைப் பிறர் நாயே, கழுதையே, மிருகமே, என ஏசுவதைக் கேட்டிருக்கலாம்.

மேற்கூறியவற்றினின்றும் மனிதனென்றால் செயற்கையறிவாம் பகுத்தறிவைப் பெற்றவனென்றே அறிகின்றோம்.

புலனறிவும் மனமும்:

புலனறிவின்றெனின் எண்ணுந் திறனைக்கொண்ட மனமும் இராதெனலாம். இயற்கைச் சூழ்நிலைப் பொருள்களையும், செயற்கைச் சூழ்நிலைகளையும் கண்டும், தொட்டும், சுவைத்தும், கேட்டும், மோந்தும் அறியும் புலன்கள் இல்லெனின் அதனாலாம் எண்ணமின்றி மனம் இருக்க முடியாதல்லவா? எனவேதான், பொறிகளை "அறிவு வாயில்கள்" என உரைக்கின்றனர். எனினும், எண்ணும் மனம் எங்காவது சென்றமையுமெனின், பொறிகள் இயங்காமையும் முன்பு கண்டோம்.

ஆகவே, மனமும் புலனும் நரம்பு மண்டலத்தின் (புலன் நரம்பு (Sensorry Nerves) கட்டளை நரம்பு Connecting) Nerves) உதவி பெற்று ஒன்று சேர்ந்தே மனிதனுக்கு அறிவைக் கொடுக்கின்றன என்பதறிகின்றோம்.

இனி, மனமும் பொறியும் சேர்ந்து, தேர்ந்துகாணும் பகுத்தறிவைப் பற்றி ஆராய்வோம்.

பகுத்தறிவு:

பொதுவாகஉயர்ந்தபொருளைக் குறைந்த விலைக்கு விற்கும் நல்ல வாணிகனைவிட, மட்ட பொருளை மிகுந்த ஆக்கத்துடன் விற்கும் வாணிகனே அறிவுள்ளவனாக இருக்கிறான்.

உண்மையை உரைக்கும் நல்லவனைவிடப் பொய்யை மெய்யாக்கும் தீயவனே திறமையுள்ளவனாக, அறிவுடையவனாக விளங்குகிறான்.

உழைத்து உண்பவனைவிடப் பிறரை ஏமாற்றி இன்பமாக வாழ்பவனே அறிவுடையவனாகக் காண்கின்றான்.

இதனை உலக வழக்கினின்று அறியலாம். கள்ள வாணிபம் செய்து அதிக ஆக்கம் பெற்று இணையின்றி வாழ்கின்றவனைச் சமர்த்தன், திறமையானவன், அறிவுள்ளவன் எனப் புகழ்கின்றனர் ஆனால் நல்லவனைப் பாவம் ஒன்றுமறியாதவன் சாதுவானவன் என்று கூறுகின்றனர்.

மேற்கண்டவற்றினின்றும் நல்லவனை விடத் தீபவனே திறமையானவன், அறிவுடையவன் எனத் தெரிகின்றது.

ஆனால், இத் தீய செயல்களே அறிவின் செயல்களெனின் உலகம் நன்முறையில் நீதி வழியில் இயங்கவியலாது. மேலும், உலக மக்களின் எதிர்காலம் மனி[illegible] தன்மையற்ற பாதையிலேயே மிகு விரைவாகச் சென்று கெட்டுவிடுமல்லவா? இதற்கொரு வகை வேண்டுமாயின், வள்ளுவன் வாக்கை யுள்ளுதல் வேண்டும்.

"சென்ற இடத்தால் செலவிடா
தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

மனதைச் சென்ற இடத்தெல்லாம் செலுத்தாது பிறருக்கின்னலை உண்டாக்கக் கூடாத நல்ல வழிகளிலேயே செலுத்துவது அறிவாம்.

மற்றத் தீய வழியில் திறமையாக முன்னேறினும் அது அறிவின்பாற் படாதாம்.

(வரும்)

Phone 55034. Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
கிடங்குத் தெரு, சென்னை 1.

முறை ஆமோ!

இப்படியும் ஒருநிகழ்ச்சி எய்துங்கொல்! இன்றமிழின்
செப்பரிய நிலையோர்க்கார் 'தி. வி. க.' எமைநீத்த
அப்பெரிய துயரின்னும் அடங்கியதோ வில்லையிவண்
ஒப்புயர்வில் கதிரேசர் உயிர்நீத்தல் ஒல்லுவதோ! (1)

கணியன்பூங் குன்றனெனுங் கழகமார் புலவனவன்
அணியார வாழ்ந்தவிடத் தமைதிவாழ் வியற்றிநலந்
தணியாத சுவைத்தமிழன் தன்மையறிந் தான்றபொருள்
புணையான பிறர்க்கோதும் புலவர்மணி! எங்கசென்றாய்? (2)

நாவரசர் தோற்றமொடு நாவலனுந் தூநிலையும்
மேவுமுது பெரும்புலவ! விழுமியபண் டிதமணியே!
பூவுலகில் நின்பெருமைப் புணர்ப்போர்ந்தும் நாட்பலவும்
நாவலவோ! கழித்திந்நாள் நலிகின்றேம் நலிகின்றேம். (3)

ஆரியத்துள் ஓங்குநலம் அழகுபொருள் அனைத்தினையும்
சீரிளமைத் தமிழ்மொழியில் செப்பியெமக் கருளினையால்
தேருமுது பெரும்புலவ! சீர்த்தகதிர் மணிவிளக்கம்
ஒருமருள் வாசகத்துள் ஒருபகுதிக் கோதினையால்! (4)

பாவினிய தேன்கன்னல் பற்றுசுவை போலினிய
நூலுணர்த்து நயங்களொடு நோன்மையெலாம் நுண்ணறிவில்
சாலவெமக் கினியார்தாம் சாற்றுவர்கள் ஐயாவோ!
சிலமுணர் பெரியோய்நீ சிந்தைசெய வேண்டாவோ! (5)

மறைமலையின் வரிசையினில் வைத்தெண்ணி வாழ்த்தியுளம்
பெருமையடைந் தேமல்லால் பெரியநின தன்புரைகள்
பொருணயங்கள் பேசியுளம் பூத்தனமல் லால்வாழ்வில்
திருமலிய நமக்கெம்மால் செய்தனவும் வேறுளவோ? (6)

மெய்த்தமிழின் வளமோங்க மிகுசைவத் துறைவாழ
உய்த்தநின துழைப்பெல்லாம் உணராதார் தாமுளரோ
வைத்தபெரு நிதியன்ன விழுப்புலவ! மேதினியில்
எத்திறத்திற் செல்வதென எமக்குணர இயம்பாயோ! (7)

தமிழன்னை தவமற்றாள் தண்புலவர் வீறிழந்தார்
அமிழ்தன்ன நூல்கள்நயம் அளந்துரைப்பார் இன்றிழந்த
அமையுஞ்சீர் ஒளிமாழ்கி அறிவுலகம் கெட்டொழிய
எமையின்று நீப்பதுவும் இயல்போபண் டிதமணியே! (8)

எத்துணையோ பேரவைகட் கிருந்தலைமை நனியேற்று
மெய்த்தமிழின் நிலைபேசி மிளிர்வித்த வித்தகவோ!
மைத்திருண்ட கண்டத்தான் மலரடிக்கண் பிரியாத
பற்றுடையாய்! பற்றெல்லாங் கடந்தருளிற் பயிலுதியே! (9)

தன்னிலைமை நலியுணராத் தமிழ்நாடே! தனிப்புலவர்
மன்னியுள மகிழ்ந்திடுஉ மாணெறிகள் வகுக்கிலாய்
அன்னவர்தா மறைந்ததற்பின் அகநெகுதல் அவைகூட்டி
முன்னவர்தம் பெருமையெலா மொழிந்திடுதல் முறையாமோ! (10)

—கவிஞர் சி. து. க.

மாணவரும் கல்வியும்

பண்டைய கல்விமுறை கல்விக்கேற்ப மாணவரை உருவாக்கியது. இக்காலக் கல்விமுறை மாணவர்க்கேற்பக் கல்வியை அளிக்கிறது. அதாவது உலகில் இனிது வாழப்புகும் மாணவருக்கேற்ற கல்விதான் வேண்டுமேயல்லாது, கல்விக்கென்றே மாணவர்களை உருவாக்கக் கூடாது என்பது மன நூல்படி ஏற்றுக் கொள்ளப்படும் சீரிய கருத்து.

உலகில் இனிது வாழ வேண்டியவர் மக்கள். அவர்கள் இனிய வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்கிறார்கள்? இனிய வாழ்வு எப்படிக் கிடைக்கிறது? அந்த இனிமைதான் என்ன?

ஒரு நாட்டின் உயர்வும் தாழ்வும் பெரிதும் அந்நாட்டாரைப் பொறுத்துள்ளது. சகாராப் பாலைவன வாசி கூட அந்த நாட்டில் இன்பமாகத்தான் வாழ்கிறான். தன் நாட்டில் தான் வாழ்வதே ஒரு சிறப்பு எனக் கருதும் இந்தப் பற்று, உலகுயிர்மீது உண்டாக வேண்டும் என்பதுதான் நல்லோர் கருத்து.

ஆனால் அதுதான் இன்றாமில்லை; ஒவ்வொருவரும் தத்தம் தாய் நாட்டின் மீது வைத்த பற்றால், அது காடாரம்பமான பூமியாக இருந்தாலும் அங்கேதான் வாழ விழைகின்றனர். இந்த விசித்திர உணர்ச்சியினால் ஊக்குவிக்கப்பட்ட ஒரு நாட்டுமக்கள் உலகில் வேறெந்த நாட்டையும் விட, தன் நாடே சிறந்து விளங்கவேண்டும் என்று எண்ணுகின்றனர். அதன் காரணமாகத் தம் சக்திக்கேற்பப் பலவிதத்திலும் தன் நாட்டு முன்னேற்றத்திற்குச் சாதகமாக நிற்க முயல்கின்றனர்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

கலைத் துறை

"மாமல்ல புரத்து இயற்கையில் திளைத்த இளங்கோவின் சிந்தனை"

வே. சா. ஏ.

பௌர்ணமி கழித்த மறுநாள் சூரியன் மேற்குத்திசையில் மறைந்தான். உழவர்கள் கலப்பையைத் தோளில் தாங்கிக் காளைகளை ஓட்டிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தவண்ணமிருந்தனர். கன்றுகளின் கதறலைக் கேட்டு எருமைகளும் பசுக்களும், கட்டுத்தறியிடம் காண விரைந்து சென்றுகொண்டிருந்தன. தங்கள் இல்லறக் கிழத்திக்கு ஆறுதல் சொல்லிக் கடல் மீது சென்ற செம்படவர்கள், எதிர் நோக்கும் நங்கையரைக் காணக் கட்டுமரத்தின்மீது விரைந்து வந்துகொண்டிருந்தார்கள். அருகிலுள்ள பொய்கையில் கதிரவன் பிரிவால் தாமரை குவிந்துகொண்டும், சந்திரன் வருகையைக் காண ஆம்பல் விரிந்தவண்ணமும் இருந்தன. ஆனால், இளங்கோவோ, இருந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை.

அவனைச் சுற்றியிருந்த வெள்ளிய மணற்பரப்பு, அவனுக்கு 'எழுகடல் மணலை அளவிடினதிகம் எனதிடர் பிறவி யவதாரம்" என்ற செய்யுளை நினைவூட்டிற்று. தன் எண்ணத் தொலையாத பிறவியை எண்ணி வருந்தினான். அதாவன்றியும்— இளங்கோ தன்னெதிரில் ஆழ்ந்த பரந்த கடல், அதன் மீது உயர்ந்தெழுகின்ற அலை, அலையைக் கிழித்த வானை நோக்கித் துள்ளி விழுகின்ற சுறாமீன்கள், அதனிடைப்பட்டுச் செம்படவர்கள் கட்டுமரத்தின் துணையால் கரைநோக்கிவருங்காட்சி இவைகளைக் கண்டான். கண்டதும், அச் செம்படவர்களின் நிலையில் தானும் இருப்பதாக எண்ணினான். பிறவிக்கடலில் கட்டுக்கடங்காது அலைகின்ற மனத்திடையே, சுறாக்களைப் போன்று தன்னிச்சையாகத் தாவித் திரியும் புலன்களின் போக்கில் உழன்று கரையேறுவதற்குப் புணையொன்றில்லாமல் தவிக்கின்ற தன்னை— தன் கற்பனைக் கடலில் கண்டான். அப்பொழுது அச் செம்படவர்கள் நிலையினும் தான் அதிகம் வருந்துவதாய் அவன் மனக்கண்முன் காட்சியளித்தது. அச்சத்தினால் உடல்சிலிர்த்தது முகம் சுருங்கிற்று. ஆறுதலுக்காகத் 'திருச்சதகத்'தைச் சொல்லிக்கொண்டிருந்தான். அதில் "தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்தெவ்வத் தடந்திரையாலெற்றுண்டு பற்றொன்றின்றிக் கனியைய நேர் துவர் வாயார் என்னுங் காலாற் கலக்குண்டு—மாகவான் சுறவின் வாய்ப்பட்டு—இனியென்னே உய்யுமாறு என்றென்றெண்ணி அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேன்" என்ற அடி வந்ததும மேலுஞ் சொல்வதை மறந்தான். பிறவிக்கடலில் தவிக்கின்ற தனக்கும் ஒரு புணை கிடைத்துவிட்டதாக எண்ணிப் பெரிதும் மகிழ்ந்தான் 'சிவாய நம' என்னும் புணையைப்பற்றி இரண்டு நாழிகைகண் மூடிமௌனித்திருந்தான். எங்கும் அமைதி நிலவிற்று. அதுகாலை அலைவாய்க் கோயிலும் அதிலுள்ள உருவங்களுமே அவனுக்குத் துணையாய் நின்றன.

அருகில் குன்றின் மேலுள்ள கலங்கரை விளக்கம் இடையிடையே ஒளி வீசி, சுழுத்தியில் ஒடுங்கியிருந்தவனை வெளியுலகத்திற்குக் கொண்டு வந்தது. கண் விழித்துக் கலங்கரை விளக்கைக் கண்டவன் மீண்டுஞ் சற்றுக் கண் மூடி மௌனியானான். அப்பொழுது பவக்கடல் கடந்து முத்தியங்கரையில் சேரவிரும்பும் அடியார்தவக்கலன்நடத்த உயர்ந்தெழுந்து நிற்கும் சோணசைலம், அதன் மீது கொழுந்துவிட்டு எரியும் சுடர் இவை அகத்தே காட்சியளித்தது. அந்தக் காட்சியைக் கலைக்க விரும்பாத அவன், நினைத்தாலே முக்தி தரும் சோணசைலனை நெஞ்சத்திருத்தி நெடுநேரம் மௌனியாயிருந்தான். அன்று, அவன் எண்ணிய எண்ணத்திலே இன்பம் இருந்தது; கண்ட காட்சியிலே இன்பமிருந்தது.

அன்றைய நிகழ்ச்சியை இளங்கோ இன்று நினைக்குந்தோறும் "நானேயோ தவஞ் செய்தேன் சிவாய நம வெனப் பெற்றேன், தேனாயின்னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான், தானே வந்தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்." எனப் பாடி இறுமாந்தான்.

பதிந்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அன்